**එම්. යූ. එම්. අලි සබ්රි, ජා. ම.**
**எம். யூ. எம். அலி ஸப்ரி, பா. உ.**
**M. U. M. Ali Sabry, PC, M.P.**
**විදේශ කටයුතු අමාත්‍ය**
**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்**
**Minister of Foreign Affairs**

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

## சுதந்திர தினச் செய்தி

இன்று எமது 76 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இக்குறிப்பிடத்தக்க நிகழ்வானது முன்னெப்போதுமில்லாத வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

ஒரு நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்னரான பயணத்திற்கு, அதன் பொருளாதார சுதந்திரம் அத்தியாவசியமானதாகும். ஒரு வருடத்திற்கு முன்னர் நாம் எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியை நினைத்துப் பார்க்கையில், தற்போதைய பொருளாதாரத்தின் மீட்சியும் எழுச்சியும் நம்பமுடியாதளவிற்குள்ளது. சிறந்த தலைமைத்துவம் மற்றும் கூட்டு முயற்சி ஆகியவை ஒன்றிணைந்து இந்த மீட்சியின் பாதைக்கு இட்டுச்சென்றுள்ளது. இச்செயற்பாட்டிற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் வெளிநாடுகளிலுள்ள எமது இராஜதந்திர தூதரகங்களும் பெரும் பங்களித்துள்ளன. இலங்கை முழுமையான பொருளாதார மீட்சியை அடைவதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியுள்ளதெனினும், இலங்கை எதிர்கொண்ட மிகவும் கடினமான காலகட்டத்தில் நாம் காட்டிய அசைக்கமுடியாத எதிர்ப்பாற்றலைக் கருத்தில் கொள்ளும்போது, முன்னேற்றப் பாதையில் நாம் எச்சரிக்கையுடனான நன்னம்பிக்கையுடன் பயணிக்க முடியும்.

ஜனநாயக கொள்கைகள், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைப் பேணுவதில் இலங்கை உறுதியாகவுள்ளது. குடிமக்கள் அனைவரையும் உள்ளடக்கி, அவர்தம் உரிமைகளைப் பாதுகாப்பதை ஊக்குவிப்பதற்காக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சானது, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் வெளிநாட்டு இலங்கையர் விவகாரங்களுக்கான அலுவலகம் ஆகியவற்றை ஸ்தாபிப்பதில் முக்கிய பங்காற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது. காலநிலை மாற்றம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமாதானம் போன்ற உலகளாவிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில், இருதரப்பு மற்றும் பலதரப்பு ஈடுபாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு, சர்வதேச ரீதியில் ஒத்துழைப்பு வழங்குவதில் தீவிரமாகவுள்ள இலங்கை, இராஜதந்திர உறவுகளைப் பேணுதல், பிராந்திய ஸ்திரத்தன்மைக்குப் பங்களித்தல் மற்றும் பொறுப்புக்களைப்

කාර්යාලය/அலுவலகம்/Office: +94 - 11-2430221, +94-11-2445498 ෆැක්ස්/பெக்ஸ்/Fax No.: +94-11-2430222
වෙබ් අඩවිය/வலைத்தளம்/Website : www.mfa.gov.lk ඊමේල්/மின்னஞ்சல்/Email: fmo@mfa.gov.lk
විදේශ කටයුතු අමාත්‍යාංශය, ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடியரசுக் கட்டிடம், கொழும்பு 01, இலங்கை.
Ministry of Foreign Affairs, Republic Building, Colombo 01, Sri Lanka

பகிர்வதை நிலைநிறுத்தல் ஆகியவற்றையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. எண்ணற்ற இருதரப்பு விஜயங்கள் மற்றும் ஆலோசனைகள் மூலமாக எமது உலகளாவிய ஈடுபாட்டினை அதிகரித்து, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளின் மேம்பாட்டினை நாம் ஆதரித்துள்ளோம். இலங்கை இந்துசமுத்திர எல்லை நாடுகள் சபையின் தலைமைத்துவ பொறுப்பையும் வகித்துள்ளது. இனிவரும் ஆண்டுகளில் இலங்கை இந்த ஈடுபாடுகளை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் வேண்டும்.

ஆனபோதிலும், எம்மக்களின் பன்முகத்தன்மையை ஒன்றிணைத்து, ஒத்திசைவானதும் வலுவானதுமான இலங்கையை உருவாக்குவதென்ற எமது முக்கியமான நோக்கத்தைக் கருத்தில் கொள்ளும்போது, எமது பணி இன்னும் வளர்ச்சி நிலையிலுள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். கடந்த 76 ஆண்டுகளில், நமது வேறுபாடுகளை முன்னிறுத்தவும் சமூகக் கட்டமைப்பு ஆதிக்கம் செலுத்தவும் அனுமதித்தோமே தவிர, எம்மை ஒன்றிணைக்கும் பொதுவான பண்புகளை வளர்க்கத் தவறிவிட்டோம். எமது உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்கு, எம்மைப் பிளவுபடுத்தும் கொள்கைகளை எதிர்ப்பதுடன், இந்த கடினமான மற்றும் விவேகமான பொருளாதார கொள்கைச் சீர்திருத்தங்களை நாம் தொடரும் அதேவேளை, எமது வேற்றுமைக்குள் ஒற்றுமையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

அனைத்து இலங்கையர்களுக்கும் மகிழ்ச்சியான சுதந்திர தின வாழ்த்துக்கள்!

எம் யு எம் அலி சப்ரி, ஜ.ச, பா.உ
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

04 பெப்ரவரி 2024